ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 6 இதழ் : 8

ஜூன் – 2010



இராஜஸ்தான் பிஜல்பூர் ஷாலோம் பள்ளி, மற்றும் விடுதியில் தங்கி படித்து வரும் பீல் ஆதிவாசி மாணவர்கள்.

**பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்,**
**கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.** சங்கீதம் 127:3

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

# ராலுசிங் ஹுட்டில்லா

மத்தியப்பிரதேசம்

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். எனது பெயர் ராலுசிங் ஹுட்டில்லா, நான் மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டம் டிக்கிடி என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் பிற இன தேவதைகளை தெய்வமாக வணங்கி வந்தேன். மேலும் விக்கிரகங்களை ஆராததித்து வந்தேன். சாராயம் குடிப்பது, சண்டை போடுதல் போன்ற பல விதமான பாவங்களுக்கு எனது வாழ்வு அடிமையாயிருந்தது. நான் சமாதானம் இல்லாதவானகக் காணப்பட்டேன்.

இந்த நேரத்தில் எனது மனைவி குழந்தை உண்டாயிருந்தாள். அவளுடைய பிரசவ நேரத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு தாங்கமுடியாத வேதனைப்பட்டாள். மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்று மந்திரக் கிரியைகள் செய்தோம், பலனில்லை. ஒரு மாத காலமாக மருத்துவமனையில் வைத்திருந்து மருத்துவம் செய்தோம், பலனில்லை. நாளுக்கு நாள் நிலமை மிகவும் மோசமானது. எழுந்து நடக்கக்கூட முடியாமல் படுத்த படுக்கையாயிருந்தாள். இந்த சூழ்நிலையில் ஷாலோம் சுதேச ஊழியர் ஒருவர் எங்களது கிராமத்திற்காக வந்திருப்பதைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடம் சென்று எனது மனைவிக்காக ஜெபிக்கும்படி கேட்டேன். எனது மனைவியை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு கொண்டு வந்தேன். ஊழியர் அவளுக்காக பாரத்துடன் ஜெபித்தார். ஜெபித்த சிறிது நாட்களில் பிரச்சனைகள் மாறின. தேவன் எனது மனைவிக்கு சுகமான பிரசவத்தைக் கட்டளையிட்டார். இந்த அற்புதத்தைக் கண்ட நாங்கள் இயேசுதான் உண்மையான தெய்வம் என்று உணர்ந்து, இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டோம். அதன் பின்பு கிறிஸ்து எங்களது பாவங்களை மன்னித்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பினார். ஊழியம் செய்ய பாரத்தையும் கொடுத்தார். எங்கள் சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து 50 குடும்பங்களை தேவனண்டையில் வழி நடத்தவும், ஆலயத்தைக் கட்டவும், இரண்டு கிளை சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்தார். தொடர்ந்து 10 கிராம சபைகளையும், 10 சுதேச ஊழியர்களையும் எழுப்பி, 1000 குடும்பங்களை கிறிஸ்துவண்டை வழி நடத்துவதே எங்களது பாரமாகும்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mr. Robinson & Family,** Coimbatore.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்த மாத மலர் மூலமாக உங்கள் யாவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த மே மாதம் முழுவதும் தேவன் நம்முடன் இருந்து ஊழியப்பாதையிலும், வாழ்க்கைப்பாதையிலும் நம்மை நடத்தி வந்தபடியால் தேவனைத் துதிக்கிறேன்.

**ஆசீர்வாதமான CBC ஊழியங்கள் :** தேவகிருபையால் மே மாதம் 6–ம்தேதி முதல் 16–ம் தேதி வரை குஜராத் மத்திய பிரதேசம் இராஜஸ்தான் மாநிலங்களில் சுமார் 500 இடங்களில் 10 நாட்கள் CBC (Children Bible Class) மிக ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்தார். சுமார் 20,000 பீல் ஆதிவாசி சிறுவர்கள் **சத்குரு ஈசு (இயேசு–நல்ல போதகர்)** என்ற தலைப்பில் வேத பாடங்கள் கற்றுக்கொள்ள CBC ஆசீர்வாதமாக அமைந்தது. இந்ததிட்டத்திற்காக சுமார் ரூ. 3,10,000 வரை செலவிடப்பட்டது. இதற்காக ஜெபித்து காணிக்கை அனுப்பித் தந்த உங்கள் யாவருக்கும் எங்கள் நன்றியை அறிவிக்கிறோம்.

மேலும் மூத்த சுதேச ஊழியர்கள் சபையார்கள் கூடுகை, குஜராத், மத்தியபிரதேச ஊழியர் கூடுகைகளை மே 1,3,4 நாட்களில் நடத்த தேவன் கிருபை தந்தார். மே 20,21 ஆகிய நாட்களில் இராஜஸ்தான் ஊழியர்கள் கூடுகை நடத்தவும் தேவன் கிருபை தந்தார். மேலும் சேவா பாரத் மூலமாக ICT ஊழியர் பயிற்சி இம்மாதம் நடைபெற்று வருகிறது. ஆலயக்கட்டுமானப் பணிகள் 3 மாநிலங்களில், 15 கிராமங்களில் நடைபெற்று வருகிறது. தடைகளின்றி கட்டிமுடிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஆதிவாசி மாணவர்கள் கல்வி பராமரிப்பு திட்டம் :** ஷாலோம் ஊழியர்கள் பிள்ளைகள் 1300 பேரில் 650 பிள்ளைகளை கல்வி அறிவு திட்டத்தின் கீழ் தாங்கி வருகிறோம். மேலும் நம்முடைய ஷாலோம் விடுதிகள், பள்ளி மூலமாகவும் சுமார் 400 பிள்ளைகளை தாங்கி வருகிறோம். மாதம் அவர்கள் படிப்பு செலவிற்காக குறைந்தது **ரூ. 4.5 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. தயவாக ஜெபித்து இந்த

உதவிகளை அனுப்பும்படி மிக அன்புடன் வேண்டுகிறேன்.மேலும் குஜராத், தாகோத் பணித்தள அலுவலகத்திலும், தூத்துக்குடி தலைமை அலுவலத்திலும் பணிபுரியும் தேவ ஊழியர்களும் மற்றும் முன்னேற்ற பணியாளர்கள் யாவருக்காக தேவனிடத்தில் வேண்டுதல் செய்யுங்கள். குறிப்பாக அவர்கள் பிள்ளைகள் கல்வி வசதிக்காக ஜெபியுங்கள்.

குறிப்பாக எங்கள் பிள்ளைகள் Titus (M.B.A ., II Yr), Shalom (B.Tech Media, IV Yr) , Joy Shekinah (+2 **முடித்து இருக்கிறாள்).** இவர்கள் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

ஜெபித்துத் தாங்கும் உங்கள் யாவருக்காவும் நாங்களும் குடும்பமாகவும், ஊழியர்களாகளாகவும் ஜெபித்து வருகிறோம்.

**“கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப்பண்ணுவார். வானத்தையும் ,பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.” (சங்கீதம் 115 : 14,15 )**

வசனங்களின்படி தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,



வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## அறிமுகப்படுத்த அன்பாய் வேண்டுகிறோம்...

பிரியமானவர்களே, இந்த அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலைரை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள், இந்த இதழை வாசித்து விட்டு அப்படியே வைத்துவிடாமல் உங்களுக்குத் தெரிந்த கிறிஸ்தவ நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் கொடுத்து ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்த அன்பாய் வேண்டுகிறோம்.

மேலும் இந்த இதழ் உங்கள் இல்லத்திற்கோ, அலுவலகத்திற்கோ ஒரே பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வருமாயின் எங்களுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

# சிறு பிள்ளைகளை நேசிக்கும் ஆண்டவர்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

*"நீ இந்த பிள்ளைகளை எடுத்துக் கொண்டுபோய் அதை எனக்கு வளர்த்திடு. நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன்". – யாத் 2 :9.*

**1. நம் ஆண்டவர் சிறு பிள்ளைகளை அதிகம் நேசிப்பவர் :**

அவர் குடும்பங்களில் கர்ப்பத்தின் கனிகளைத் தந்து ஆசீர்வதிக்கிறவர். வேதம் சொல்கிறது சங் 139 : 13–16 வரை வாசித்துப் பாருங்கள். *"என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாய் இருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதிலே அவைகள் அனைத்தும் அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது."* நாம் சிறு பிள்ளைகளாகக் கருவில் உருவாகும் போதே ஆண்டவர் நம்மை அறிகிறார்.

பார்வோன் ராஜா ஆண் பிள்ளைகள் எல்லாவற்றையும் அழிக்க திட்டமிட்டாலும். பூவாள், சிப்பிராள் மருத்துவச்சிகள் மூலம் காப்பாற்றுகிறார். பிசாசானவன் ஆண் பிள்ளைகளை அதாவது வாரிசுகளை அழித்து தேவ சந்ததியை அழிக்க திட்டமிட்டிருக்கிறான். அதேபோல் புதிய ஏற்பாட்டில் "இயேசு" பாலகனை அழிக்க ஏரோது ராஜா திட்டமிட்டு பெத்லகேமை சுற்றியுள்ள ஆண் பிள்ளைகளை அழிக்கிறார். ஆனால் பிசாசானவன் ஏரோது ராஜா மூலமாக தீட்டிய திட்டங்கள் நிறைவேறவில்லை. தேவன் ஒவ்வொரு பிள்ளைகளைக் குறித்தும் திட்டங்களை வைத்திருக்கிறார்.

ஏரேமியா 1:5 ல் எரேமியாவைப் பார்த்து தேவன் சொல்கிறார் *நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாக்கும் முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்தில் இருந்து வெளிப்படும் முன்னே நான் உன்னை பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கத்தரிசியாகக் கட்டளையிட்டேன்* என்று சொன்னார். தாயின் வயிற்றில் உருவாகும் முன் நம்மை அறிந்தவர் தேவன். கர்ப்பத்தில் இருந்து வெளிப்படும் முன்னே நம்மை பரிசுத்தப்படுத்துகிறார் தேவன். மட்டுமல்ல தீர்க்கதரிசியாக மாறும்படி நமக்கு கட்டளையிடுகிறார் நம் ஆண்டவர்.

சாமுவேலை தேவன் சிறு பிள்ளையாக இருக்கும்போது தெரிந்தெடுத்து தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்கு தம்மை வெளிப்படுத்தினார். தேவன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் முதல் தீர்க்கதரிசியாக அவனை நிலை நிறுத்துகிறார்.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை தேவன் தெரிந்து கொண்டு சமஸ்த இஸ்ரவேலின் மீது ராஜாவாக மாற்ற சித்தம் கொண்டார்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்து ஊழியம் செய்த நாட்களில் சிறு பிள்ளைகளை அதிகம் நேசித்தார் என்பதைக் காண்கிறோம்.

மாற்கு **10:13–16** வரை வாசித்துப் பாருங்கள் *"அப்பொழுது, சிறு பிள்ளைகளை தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டு வந்தவர்களை சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து, சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடை பண்ணாதிருங்கள். தேவனுடைய இராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப் போல் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்."* சிறு பிள்ளைகளை அவரிடத்தில் வருவதற்குத் தடை செய்த சீஷர்களைக் கண்டு விசனமடைகிறார். சிறு பிள்ளைகளை இயேசுவினிடம் வருவதற்குத் தடை பண்ணாதிருங்கள் என்று கூறுகிறார்.

(i) இயேசு சிறு பிள்ளைகளை அணைக்கிறார்.

(ii) இயேசு சிறு பிள்ளைகள் மீது கைகளை வைக்கிறார்.

(iii) இயேசு சிறு பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.

இயேசு பணக்கார வீட்டுப் பிள்ளை, வேண்டிய பிள்ளை, வேண்டாத பிள்ளை, அழகான பிள்ளை, அழகில்லாத பிள்ளை, உயர்ஜாதி பிள்ளை, ஆதிவாசி பிள்ளை என்று காண்பதில்லை. எல்லா சிறு பிள்ளைகளையும் ஆண்டவர் நேசித்து அரவணைத்து ஆசீர்வதிக்கிறார்.

**2. இந்தப் பிள்ளையை எடுத்துக் கொண்டுபோய் அதை எனக்கு வளர்த்திடு:**

மோசே பிறந்த போது பார்வோன் ராஜாவின் ஆணையின்படி மரணத்திற்கு கட்டளையிடப்பட்ட பிள்ளை. மூன்று மாதங்கள் மட்டும்தான் பெற்றோர்களால் வளர்க்கப்பட்டு,

பின்பு பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளை. நதியில் நாணல் பெட்டியில் விடப்பட்டு பசியினால் அழுத பிள்ளை. கேட்பாரற்று கிடந்த பிள்ளை. ஆனால் தேவன் அந்த பிள்ளையை மறக்கவில்லை. பார்வோன் குமாரத்தியின் பார்வையில் இரக்கம் பெற்ற பிள்ளை. தான் வளர்க்க முடியாமல் வளர்க்கும்படியாக ஆள் தேடினாள். தேவ திட்டத்தின்படி பிள்ளை மோசேயின் தாயினிடமே சேர்க்கப்படுகிறான். மோசேயை பெற்றெடுத்த தாய் கைவிட்ட பின்பு தன் பிள்ளையையே வளர்ப்புப் பிள்ளையாக வளர்க்கிறாள். தன் மகனாக வளர்க்க முடியவில்லை. பார்வோன் குமாரத்தியின் மகனாக இராஜாங்க வசதிகளையும், பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவனாக வளர்க்கப்பட்டாலும் அவன் பார்வோன் குமாரத்தியின் மகன் அல்ல. ஆனால் மோசேயோ தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய, தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற கர்த்தருடைய தாசனாக ஊழியம் செய்து கர்த்தரே அவனை அடக்கம் பண்ணினார்.

எனக்கன்பானவர்களே, மோசேயைப் போல் ஒருவேளை நம்முடைய பிள்ளைகளும் இருக்கலாம், இல்லையென்றால் பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகளாக இருக்கலாம், இரக்கத்தைத் தேடி அழும் பிள்ளைகளாக இருக்கலாம். பார்வோன் ராணியை போல் தேவன் நமக்கு இவ்வுலகில் வாழும் பல இலட்சம் பிள்ளைகளில் சில பிள்ளைகள் நம்மை கண்டு, நம்மிடத்தில் வளர்க்கும் பொறுப்பை கொடுக்கலாம். அவைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

200 ஆண்டுகளுக்கு முன்பு நம்மை தேடி மிஷனெரிகள் வந்த போது சுவிசேஷத்தை மட்டும் அறிவிக்காமல் நம் முன்னோர்களுக்கு பள்ளி கூடங்களையும் கட்டித் தந்தார்கள். சிறுவர் இல்லங்களை கட்டினார்கள். இன்று நம் சமுதாயம் உண்மையாக ஆசீர்வாதங்களை பெற்றுள்ளது அல்லவா. நெல்லை மாவட்டத்தில் ரேனியஸ் ஐயர் அவர்கள் மூலமாக ஆரம்ப பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறு பிள்ளைகளுக்கு கல்வியறிவு கொடுத்தார். சாரா டக்கர் என்ற அம்மையாரின் நிதி உதவி மூலமாக பெரிய கல்வி நிறுவனமே ஆரம்பிக்கப்பட்டு புதிய சமுதாயம் உருவானதல்லவா! எமி கார்மிக்கேல் அம்மையார் மூலமாக ஆயிரமாயிரம் அனாதை சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு தழைக்கிறார்கள். இன்று தேவன் World Vision, Compassion India, Bethel போன்ற சிறுவர்கள் பராமரிக்கும் ஸ்தாபனங்கள் இதே போல் ஆயிரமாயிரம் பிள்ளைகளை தத்து எடுத்து வளர்த்து தேவ மகிமைக்காக உருவாக்குகிறார்கள். தேவன் நமக்கு தந்த தரிசனம் இதுதான். 80 இலட்ச பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பது மட்டுமல்ல. பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வளர. கல்வியறிவைக்

கொடுத்து, சமுதாயத்தை மாற்றி அமைக்கும் தலைவர்களாக உருவாக்க வேண்டும். நாம் கொடுத்து ஆதரித்து வரும் பீல் ஆதிவாசி மாணவர்கள் எதிர் காலத்தில் மோசேக்களாக, தாவீதாக, சாமுவேலாக, பேதுரு, பவுல்களாக தேவனுக்காக எழும்பிப் பிரகாசிப்பார்கள்.

**3. நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேன்:**

மோசேயின் தாயார் யோகெபேத் மற்றும் தகப்பன் அம்ராமும் (யாத் 6:20) மூன்று மாதங்கள் மட்டும் பிள்ளையைப் பெற்று பாசத்துடன் வளர்த்துக் காத்துக் கொண்டார்கள். எத்தனையோ ஆண் பிள்ளைகள் நதியில் தூக்கி எறிந்துவிட்ட பெற்றோர்கள் தங்கள் உயிரை காத்துக் கொண்டு வாழும் வேளையில், தங்கள் உயிரினும் மேலாக தேவன் தந்த கர்ப்பத்தின் கனிக்காக கொண்ட பாசம் பெரிதல்லவா! அவர்கள் விசுவாசம், 3 மாதங்கள் காத்த தேவன் இனியும் நடத்துவார் என்பதே!

மறுபடியும் பார்வோன் குமாரத்தியின் மூலமாக வளர்ப்பதற்கு சம்பளம் கொடுக்கப்பட்டது. நிச்சயமாகவே, யேகோவா தேவன் பேரில் விசுவாசம் கொள்ளும்படியாக, உறுதியாய் விசுவாச வாழ்க்கையில் வளர்த்திருக்கிறாள் வளர்ப்புத்தாய் எனப்பட்ட உண்மையான தாய். அந்த விசுவாசமே சொந்த ***"இஸ்ரவேல்"*** *ஜனத்திற்காக செயல்பட வைத்தது. (யாத்: 2:11)*

மறுபடியும் மோசே பெரியவனான போது, அரண்மனையில் ராஜ குமாரனாக அனைத்துக் கலைகளையும் படித்து, சகல காரியங்களிலும் கீர்த்தி பெற்றவனாக விளங்கினான். மோசேயை பெற்றெடுத்து பின்பு வளர்ப்பு தாயாக செயல்பட்ட தாய், வளர்ப்பு தாயாக செயல்பட்ட பார்வோன் குமாரத்தி ஆகிய இருவரும் தங்கள் காரியங்களை முடித்த பின்பு தேவன் தம் திட்டத்திற்குப் பயன்படுத்த ஆரம்பித்தார். தமது சொந்த ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்தின் பார்வோன் கைக்கு மீட்டு கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல தம் தாசனாக தெரிந்து கொண்டார். இம்மாபெரும் பணிக்காக மோசேயை ஆயத்தப்படுத்த இவர்களை தேவன் பயன்படுத்தினார்.

தேவன் நம் கரங்களிலும் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் அநேக தேவையுள்ள ஆயிரம், ஆயிரம் பிள்ளைகளை நம் முன்பாக வைத்துள்ளார். அவர்களை நாம் பொறுப்பெடுத்து, தேவனுடைய திட்டம் நிறைவேறும் வரை செயல்பட்டால், நம்மையும் தேவன் ஆசீர்வதிப்பார். பூவாள், சிப்பிராள் மருத்துவச்சிகள் ஆண்பிள்ளைகளைக் கொல்லாதபடி உயிர் பிழைக்க செய்தபடியால், மருத்துவச்சிகளை தேவன் தழைக்கச் செய்தார். அவர்களுக்கு நன்மை செய்தார். (யாத் 1:20,21)

அதே போல் நம் அருள்நாதர் இயேசுவும் அப்படியே சொன்னார். மத்தேயு 25 : 40–ல் *''மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். (சங் : 41:1)*

நாம் சிறுபிள்ளைகளை கர்த்தரண்டை வழிநடத்த கர்த்தருக்குள் அவர்களை நேசித்து வழிநடத்த முன்வரும் போது ஆண்டவர் நம் சந்ததியை கட்டாயம் ஆசீர்வதிப்பார். உன்னத தேவன் நமக்கு இந்த பூமியில் சன்மானம் தருவது மட்டுமன்றி, பரலோகத்திலும் நமக்கு மிகுந்த நன்மைகளை வைத்திருப்பார்.

தேவன் தாமே நம் பாரத தேசத்தில் வாழும் சிறுவர் சிறுமிகளை ஆசீர்வதிக்க அவர்களை இயேசுவண்டை கொண்டுவருவோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம்.

## சுதேச ஊழியர்கள் ஆதரவாளர்கள் கவனத்திற்கு

நம் அனைத்து பீல் சுதேச ஊழியர்கள் மிகவும் சிறப்பாக ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக தேவன் பலத்த அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வருகிறார். நம் பீல் சுதேச ஊழியர்களில் பல ஊழியர்கள் தங்களுடைய வேலையையும், தொழிலையும் விட்டுவிட்டு ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் பள்ளியில் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் படிப்பில் சிறந்து விளங்குகின்றனர். ஊழியர்களின் பிள்ளைகள் அனைவருமே இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

இந்த ஜுன் மாதத்தில் ஊழியர்களின் பிள்ளைகள் அடுத்த புதிய கல்வியாண்டிற்குள் நுழையும்போது அவர்கள் படிப்பிற்காக நாம் தான் உதவி செய்ய வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஊழியர்கள் வீட்டிலும் சுமார் மூன்று அல்லது நான்கு பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். ஆகையால் மிஷனெரிகளைத் தாங்கும் ஆதரவாளர்கள் தங்களுடைய மிஷனெரி பிள்ளைகளின் படிப்பிற்காக ரூ. 1000/– அல்லது அதற்கு மேல் ஜுன் மாத ஆதரவு தொகையுடன் அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். நீங்கள் செய்கின்ற இந்த உதவி மூலமாக ஆதிவாசி சிறு பிள்ளைகள், நலம் பெற்று சமுதாயத்தில் நல்ல நிலைமைக்கு வருவார்கள்.

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்




*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web adress : http://www.shalommission.in**


## Be¡X Tj§¬dûL (English Magazine)

பிரியமானவர்களே,




நீங்கள் அன்புடன் நேசித்து வரும் **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** பத்திரிகை தற்போது ஆங்கிலத்திலும் வெளிவருகின்றது. இதை **"Sharing Love Mission News Letter"** என்ற பெயரில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடுகின்றோம். உங்களுக்கு இந்த ஆங்கில பத்திரிகை தேவையெனில் எங்களுடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்த அன்புடன் கேட்கிறோம். அதன்பின் நாங்கள் உங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இந்த இதழை உங்கள் முகவரிக்கு அனுப்புகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காக அனுப்பப்படுகிறது.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2010) பத்திரிகைச் சந்தாவை செலுத்தி பத்திரிகை ஊழியத்தை தாங்கவும், பத்திரிகை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–  ஆயுள் சந்தா : ரூ.600/–**

## உங்கள் கவனத்திற்கு

- ✞ உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து பழைய, புதிய முகவரிகளை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.
- ✞ நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் தெளிவான முகவரியை எழுதுங்கள்.
- ✞ உங்கள் பகுதியில் நம் ஷாலோம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்திலிருந்து உங்களுக்கு அதிக பட்சம் 20 நாட்களுக்குள் நன்றி கடிதம் அனுப்பி வைக்கப்படும்.
- ✞ நீங்கள் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிக பட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் அனுப்பி வைப்போம்.
- ✞ ஒருவேளை இரசீதும் நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த கேட்டுக் கொள்கிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.
- ✞ எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணை (Partner No.) குறிப்பிடவும்.

## ஷாலோம் கிளை அலுவலகங்கள்

| **சகோ. B. எபனேசர் டேனியல்/ சகோ. டயஸ் போஸ்** | **சகோ. G. செல்வதுரை,** |
|---|---|
| 16 F 1, M.R.J. Apartment ,<br>ஆண்டவர் நகர், 5வது தெரு,<br>கோடம்பாக்கம் , சென்னை – 600–094<br>செல் : 093444–75468, 9042780315 | **M.T.N.** பில்டிங்,<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம்<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>செல் : 094876–89869 |

## ***NET TRANSFER*** **மூலமாக காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, **Internet** உதவியோடு **NET TRANSFER** மூலமாக காணிக்கை அனுப்பிய பின்பு உடனடியாக எங்களுக்கு காணிக்கை அனுப்பிய அனைத்து விபரங்களையும் ஈ–மெயில் மூலமாகவோ, எஸ்.எம்.எஸ். மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தெரியப்படுத்த மிக அன்பாயக் கேட்கிறோம். நீங்கள் தெரிவிக்கத் தவறினால் காணிக்கை அனுப்பியது யார் என்பது தெரியாமல்கூட போக வாய்ப்புள்ளது. ஆகவே தயவு கூர்ந்து தகவல்களைத் தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது எங்களுடைய கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவும், உங்களுக்கு ரசீது மற்றும் நன்றிக் கடிதம் உடனடியாக அனுப்பவும் ஏதுவாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**email : info@shalommission.in,**


மேலும் தொடர்புக்கு : **Cell : 9345675468**

## குழந்தை ஆதரவாளர்கள் கவனத்திற்கு


தேவன் நமக்கு இதுவரையில் சுமார் 25 ஆயிரம் ஆதிவாசி விசுவாச சிறுபிள்ளைகளை தந்துள்ளார். அவர்களில் 400 பிள்ளைகளை மட்டும் தெரிந்தெடுத்து ஷாலோம் விடுதியிலும் மற்றப் பள்ளியிலும் வைத்து படிக்க வைத்து கொண்டிருக்கிறோம். அதிலுள்ள குழந்தையைத்தான் நீங்கள் மாதந்தோறும் காணிக்கை கொடுத்து தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஜுன் மாதத்தில் இவர்கள் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்பிற்கு செல்ல இருக்கிறார்கள்.

ஆகவே இந்த மாதம் இவர்களுக்கு பள்ளி கட்டணம், புத்தகம், சீருடை ஆகியவற்றிற்கு நாம் உதவி செய்யவேண்டும். ஆகவே நீங்கள் தாங்கி வருகிற குழந்தைகளுக்கு ஜுன் மாத காணிக்கையுடன் ரூபாய் 500/– சேர்த்து அனுப்பி உதவ மிக அன்புடன் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

# T¦jR[j§tÏ AYNWUôLj úRûYITÓm ETLWQeLs






❖ கூட்டங்கள் முகாம்கள் நடத்துவதற்கு ஆம்பிளிபயர், ஸ்பீக்கர், மைக், மிக்சர் (ரூ.1 லட்சம் மதிப்பில்)



❖ பணித்தள காரியங்களை வீடியோ எடுக்க, மற்றும் செய்திகளை வீடியோ எடுத்து கிராமங்களில் உள்ள நம்முடைய விசுவாசிகளுக்கு அனுப்ப நல்ல ஒரு வீடியோ கேமரா (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)

❖ ஆடியோ ரெக்கார்டிங் ரூம் அமைக்கப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



❖ ஆடியோ ரெக்கார்டிங் –ற்கான உபகரணங்கள் – பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், மற்றும் செய்திகள் 1000 கிராம சபைகளுக்கு அனுப்பப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



❖ 10 முக்கிய ஊழிய பொறுப்பாளர்களுக்கு 10 மோட்டார் சைக்கிள் தேவை (ரூ. 35,000 x 10)



❖ Training Unit & Communication Department க்கு 3 கம்ப்யூட்டர் தேவை (ரூ. 30,000 x 3)



❖ ஆராதனைகள் சிறப்பாக நடத்துவதற்கு Drum Set (ரூ.50,000) மற்றும் Pad (ரூ.30,000) தேவை



❖ மூன்று மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் கூட்டங்களை நடத்துவதற்கு நல்ல 3 ஜெனரேட்டர்கள் தேவை. (ரூ. 40,000 x 3)

***தேவைகளுக்காக ஜெபியுங்கள் கர்த்தர் உங்கள் உள்ளங்களில் பேசினால் மேற்கண்டவற்றில் ஏதாவது வாங்க காணிக்கையாகவோ அல்லது மேற்கண்ட உபகரணங்களாகவோ வாங்கிக் கொடுக்கலாம். கர்த்தர்தாமே உங்கள் குடும்பத்தை, ஊழியங்களை, தொழிலை ஆசீர்வதிப்பாராக...***

## பாஸ்டர். ஆமோஸ், பாஸ்டர். ஏசுதாசன் மற்றும் குழுவினரின் (மார்த்தாண்டம்) பணித்தள வருகையும் ஆலயபிரதிஷ்டைகளும்

தேவகிருபையால் நம் ஷாலோம் ஊழியர்களை அதிகமாய் நேசித்து, ஜெபித்து தாங்கி வரும் பாஸ்டர். ஆமோஸ் (A.G சபை மார்த்தாண்டம்) அவர்கள் நம் ஊழியங்களை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தி உதவியும் உற்சாகப்படுத்தியும் வருகிறார்கள். அவர்கள் அன்பு சகோ. பாஸ்டர். ஏசுதாசன் அவர்கள் (A.G சபை திருவட்டார்) நம் ஊழியத்தை அவர்கள் மூலமாக அறிந்து ஷாலோம் ஊழியர்களை ஜெபித்துத் தாங்கி வருகிறார்கள். அவர்கள் மூலமாக ஒரு கிராம ஆலயத்திற்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

கடந்த **21.04.2010** அன்று **பாஸ்டர். ஆமோஸ்** அவர்களும், அவர்கள் புதல்வனும், அவருடன் **பாஸ்டர். ஏசுதாஸ்** அவர்கள் மனைவியுடன் குடும்பமாக பணித்தளம் வந்தார்கள். அன்றைய தினம் இராஜஸ்தானில் அம்பாபாடா கிராமத்தில் கட்டப்பட்ட கிராம தேவாலயம் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. இக்கிராம ஆலயம் பாஸ்டர். ஏசுதாஸ் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி மூலமாக கட்டப்பட்டது. செய்திவேளையிலும் ஆராதனை வேளையிலும் பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாக ஊற்றப்பட்டார். அம்பாபாடா சபை ஊழியர் சகோ. கல்லா டாமோர் மூப்பர்கள், விசுவாசிகள் சிறப்பு கலாச்சார வரவேற்பு கொடுத்தார்கள்.

**22.04.2010** அன்று சபை மற்றும் குடும்பத்தின் சார்பில் **140** ஹிந்தி வேத புத்தகங்கள் ஊழியர்கள் கரங்களில் ஜெபத்துடன் வழங்கப்பட்டது., மேலும் மத்தியபிரதேசத்தில் சொக்பாடா, குவாலி, பற்ரா, ஹக்வாணி கிராம சபைகளைச் சந்தித்து உற்சாகப்படுத்த தேவன் கிருபை தந்தார்.

**23.04.2010** அன்று மத்திய பிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் வட்டா என்ற கிராமத்தில் கட்டப்பட கிராம ஆலயத்தை பிரதிஷ்டை பண்ண தேவன் கிருபை தந்தார். சுதேச ஊழியர் மால்சிங்பாய் குடும்பமாக ஊழியம் செய்கிறார். அந்த வட்டாரத்தில் தேவன் தந்த எழுப்புதலுக்காக தேவனைத் துதிக்கிறோம். இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டத்தில் டாக்டர்.சுரேஷ் ஜெ. பால் அவர்கள் குடும்பத்தார் கொடுத்த நிதி உதவி மூலமாக கட்டப்பட்டது. மேலும் C B C ( Children Bible Class) மூலமாக 500 பேருக்கு மேலாக Teacher Training கொடுக்கப்பட்டதை கண்டு அவர்கள் உற்சாகப்படுத்த தேவன் கிருபை தந்தார்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**Pr. ஏசுதாஸ்** (A.G. சபை, திருவட்டார்), அவர்களின் **பணித்தள வருகை...**
**Pr. ஆமோஸ்** (A.G. சபை, மார்த்தாண்டம்)

*(ஏப்ரல் 21,22,23)*



பீல் ஆதிவாசி கலாச்சாரப்படி வரவேற்பு



விசுவாசிகளுக்கு வழங்கப்படும் வேதாகமங்கள்





வட்டா, (மத்தியப்பிரதேசம்) கிராம ஆலய பிரதிஷ்டை





அம்பாபாடா, (இராஜஸ்தான்) கிராம ஆலய பிரதிஷ்டை



செய்தி வேளையில் Pr. ஏசுதாஸ் அவர்கள்



செய்தி வேளையில் Pr. ஆமோஸ் அவர்கள்

# ஒவ்வொரு கிராமங்களிலும், இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருமுழுக்கின் மூலமாய் அறிக்கை செய்யும் பீல் மக்கள்



திருமுழுக்கு ஆயத்தக் கூட்டம்



திருமுழுக்கிற்காக காத்திருக்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்





திருமுழுக்கு கொடுக்கப்படுகிறது...

# பணித்தளத்தில் நடைபெற்ற அற்புதங்களில் சில...



ஜெபித்த சுதேச ஊழியர் வர்சிங் பாய் குடும்பம்



சுமார் 30 ஆண்டுகளாக குழந்தை இல்லாத 55வயதான மடியாபாய் தம்பதிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் கொடுத்த கர்ப்பத்தின் கனி.





அநேக ஆயிரங்கள் செலவிட்டு மருத்துவம் பார்த்தும் குணமாகாத இந்த சகோதரரின் பெலவீனமான கால்கள் பணித்தளத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் சிகிச்சை பெற்ற மறுநாளே குணமானது.

## *நமது பணித்தளத்திற்கு*

**ஊழியர்கள் தேவை...**

**"அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்." மத்தேயு 9:37**

பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில், எங்களுடன் இணைந்து ஊழியங்களை நிறைவேற்ற நமது குஜராத், தாகோத்திலுள்ள ஷாலோம் தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்ய 5 தேவ பிள்ளைகள் மிகவும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகிறார்கள்.

1. **ஆதிவாசி குழந்தைகள் பராமரிப்புத் திட்டத்தை நிர்வகிக்க...**
2. **ஷாலோம் சபைகளை நிர்வகிக்க....**
3. **Media & Communication Director ஆக செயல்பட...**
4. **நிதித் துறையை (Accounts Department) நிர்வகிக்க...**
5. **நமது பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களுக்கு Personal Assistant ஆக செயல்பட...**

இதற்காக பாரத்துடன் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்த, தேவனால் அழைக்கப்பட்ட, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இதை ஒரு தேவனுடைய அழைப்பாகவும், அரிய வாய்ப்பாகவும் கருதி எங்களோடு தொடர்பு கொள்ள அன்பாய் கேட்கிறோம்.

***தேவன்தாமே உங்களையும் உங்களது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!***

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்."** யோவான் 12:26

**எங்களுடன் தொடர்பு கொள்ள**

| | | |
|---|---|---|
| | **Cell :** | **09377445468 - Bro. V. Devadass,**<br>**09345675468 - Bro. Sam Gunaseelan** |


தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu. Phone: 0461 - 2375468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# ஜெபக்குறிப்புகள்

**பீல் மக்கள்**

✞ குஜராத் மத்திய பிரதேசம் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வாழும் 1 கோடி பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Sharing Love Mission**

✞ ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்டுள்ள 435 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

✞ 2010–ம் வருடத்தின் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Diocese in India**

✞ ஷாலோம் பேராயத்திற்காகவும், 77 மூத்த ஊழியர்களுக்காகவும், அந்த சபைகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

✞ சபை மூப்பர்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Charity Mission**

✞ ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெறும் சமுதாய நலத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

✞ நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ நமது ஷாலோம் விடுதியில் படித்துவரும் ஆதிவாசி பிள்ளைகளுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

**அலுவலக ஊழியங்கள்**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் சென்னை மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்களில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

✞ அலுவலக ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

**ஊழியத் தேவைகள்**

✞ இந்த ஜீன் மாதத்திற்கான தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்படியாக ஜெபியுங்கள். மாதந்தோறும் ரூ.500/– கொடுக்கக்கூடிய 1000 கிராம ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**20ம் ஆண்டு திட்டத்திற்காக....**

✞ வருகிற ஜீலை 1ம் தேதி அன்று நம்முடைய ஷாலோம் ஊழியங்கள் ஆரம்பித்து 19 ஆண்டுகள் முடிந்து 20ம் ஆண்டிற்குள்ளாக செல்ல உள்ளது. 20ம் ஆண்டில் தேவன் ஊழியங்களில் பெரிய காரியங்களை செய்யும்படியாக ஜெபியுங்கள்.

- ✞ ஜீலை 1 ம் தேதியன்று அனைத்து சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்களுக்கு விசேஷித்த ஸ்தோத்திர கூடுகை மற்றும் 20 ம் ஆண்டு திட்ட ஊழிய செயல்படுத்த ஜெபியுங்கள்.
- ✞ 20ம் ஆண்டு திட்டங்களை நிறைவேற்ற நமக்கு தேவையான பொருளாதார உதவிகள் கிடைக்கப் பெறவும் அதற்காக ஆதரவாளர்களை தேவன் எழுப்பும்படியாகவும் ஜெபியுங்கள்.

### ஆதிவாசி சிறுபிள்ளைகள் படிப்பு

- ✞ இந்த ஜீன் மாதத்தில் நமது சுதேச ஊழியர்களில் பிள்ளைகள் மற்றும் விடுதியில் படித்து வரும் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் புதிய கல்வியாண்டிற்குள் செல்கிறார்கள். இந்த கல்வியாண்டு அவர்களுக்கு ஆசீர்வாதமாக அமைய ஜெபியுங்கள்.
- ✞ ஆதிவாசி சிறு பிள்ளைகள் படிப்பிற்காக நமக்கு சுமார் 4.5 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

### B.Th., பட்டமளிப்பு விழா

- ✞ ஜீன் 8ம் தேதி குஜராத், தாகோத்தில் நடைபெறவுள்ள நமது ஷாலோம் சுதேத ஊழியர்களில் B.Th., முடித்த 60 பேருக்கு பட்டமளிப்புவிழா சிறப்பாகவும், பாதுகாப்பாகவும் நடைபெற ஜெபியுங்கள்.

### சகோதரர் குடும்பத்திற்காக..

- ✞ சகோதரர் தேவதாஸ் அவர்கள் மற்றும் சகோதரி வகிதா தேவதாஸ் அவர்களுக்காகவும் தேவன் நல்ல சுகத்தையும் பாதுகாவலையும் ஞானத்தையும் கொடுத்து ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ✞ சகோதரர் தேவதாஸ் அவர்கள் பிள்ளைகள் டைட்டஸ் ஷாலோம் ஷெக்கினா ஆகியோரின் படிப்பிற்காகவும் அவர்களுடைய எதிர்காலத்திற்காகவும் அவர்களையும் தேவன் ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

### மழைக்காக

- ✞ இந்த ஆண்டில் தேவன் நல்ல மழையை தந்து நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளை ஆசீர்வதிக்கவும் அவர்களுடைய வயல் நிலங்கள் ஆசீர்வதிக்கப்படவும் அவர்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள்.

### ஆதரவாளர்கள்:

✞ ***அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? (ரோமர் 10 : 15)*** ஷாலோம் ஊழியத்திற்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் தேவன் எழுப்பிய ஒவ்வொரு ஆதரவாளர்களுக்காக ஜெபியுங்கள். குறிப்பாக மிஷனெரி ஆதரவாளர்கள், கிராம ஆதரவாளர்கள், குழந்தை ஆதரவாளர்கள், பணித்தளத்தில் ஆலயம் கட்டிக்கொடுப்பவர்கள், Bible Project, மிஷனெரி பணிக்காக கொடுப்பவர்கள், அவ்வப்போது காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள், Board Members, ஷாலோம் பிரதிநிதிகளுக்காக ஜெபியுங்கள்.

உங்களுக்காகவும் நாங்கள் அனுதினமும் ஜெபித்து வருகிறோம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக...

# சிறப்பு நிதி ஆதரவாளர்கள் கவனத்திற்கு


நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக ஊழியர் மற்றும் விசுவாசிகளின் ஆதிவாசி பிள்ளைகள் 400 பேரைத் தாங்கி வருகிறோம். இவர்களின் சுமார் 73 பேருக்கு ஆதரவாளர்கள் கிடையாது. ஆனாலும் கூட மிகுந்த நெருக்கத்தின் மத்தியிலும் இவர்களை தாங்கி வருகிறோம். மற்றுமல்லாமல் இது தவிர நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 500 பேர் தங்கள் வீட்டிலும், வேறு விடுதியிலும் கல்வி பயின்று வருகிறார்கள். இந்த ஜுன் மாதத்தில் பள்ளி கட்டணம் செலுத்தி படிக்க வைக்க வேண்டும் என்றும், இந்த ஊழியர்களின் பிள்ளைகளையும் நாம் ஜெபித்துத் தாங்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறோம்.

ஆகவே இந்த திட்டத்திற்காக ரூபாய். 4,50,000/– தேவைப்படுகிறது. இந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்து ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி காணிக்கைகளை அனுப்பி உதவ மிக அன்பாய் கேட்கிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## *அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...*

## நினைவுப்படுத்துகிறோம்......

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O, D.D, Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

# நமது பணித்தளங்களில் நடைபெற்ற

## CBC (Children Bible Class)




குஜராத், நகரேலா கிராம ஆலயத்தில்




இராஜஸ்தான், கும்புரா கிராம ஆலயத்தில்




மத்தியப்பிரதேசம் விசல்பூர், சொக்வாடா கிராம ஆலயங்களில்




உற்சாகத்துடன், தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளுதம் மாணவர்கள்

## Pr. ஸ்டீபன் ஜோசுவா & குழுவினரின் (சென்னை)

## *பணித்தள வருகை* *(ஏப்ரல் 17,18,19)*




மத்தியப்பிரதேசம், ஹசல்வட் கிராம ஆலய பிரதிஷ்டை




இராஜஸ்தான், ஹசார்வாடி கிராம ஆலய பிரதிஷ்டை



கலாச்சார வரவேற்பு



செய்தி வேளையில்



விசுவாசிகளுக்கான சிறப்பு ஜெபம்



வில் அம்புகளுடன்...

# முதல் வட இந்திய ஊழியப் பயணம்

**பாஸ்டர். ஜோஸ்வா ஸ்டீபன், துதி சுவிஷேச திருச்சபை – சென்னை.**



தேவகிருபையால், அதிகமான ஜெபத்துடன், ஆவியானவரின் ஏவுதலின்படி ஷாலோம் ஊழியங்களை அறிந்து பீல் மக்கள் மத்தியில் 2 கிராம ஆலயங்களை கட்டுவதற்கு எங்கள் சபையார் மூலமாக நிதி உதவி அனுப்புகிறோம். அவைகளை பிரதிஷ்டை செய்வதற்காக எங்கள் துதி சுவிஷேச திருச்சபை மூப்பர்கள் மூவருடன் ஏப்ரல் 15–ம் தேதி முதல் 19–ம் தேதி வரை பணித்தளங்களை காணவும், ஆலயங்களை பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபை தந்தார்.

ஷாலோம் ஸ்தாபனம் பீல் ஆதிவாசி மக்களிடையே சுவிஷேசத்தை அறிவிக்கும் ஊழியத்தை உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படுகின்றனர். தேவனின் தெளிவான வழிநடத்துதலால் இவர்களின் தியாகம் நிறைந்த ஊழியத்தை கர்த்தர் அற்புதமாய் பெருகப் பண்ணுகிறார் என்பதை உணர முடிகிறது.

பீல் ஆதிவாசி மக்கள் வசதியற்ற சுழ்நிலையிலும் அவர்கள் கர்த்தர்மேல் வைத்திருக்கிற அன்பு, பக்தி, வைராக்கியம் இவை அனைத்தும் எங்கள் உள்ளங்களை உணர்த்தியதாக இருந்தது. எங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஒரு தூண்டுதலாக இவை அமைந்தன.

இராஜஸ்தான் மாநிலத்தில் கும்புரா, கோய்க்கா பணித்தளங்களை காணவும் ,கசர்வாடி கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். அங்கு **போதகர்.ஹிர்ஜிபாண்டா** அவர்களும் விசுவாசிகள் மூப்பர்களும் கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக ஊழியம் செய்வதைக் கண்டு தேவனைத் துதித்தோம். மத்திய பிரதேசத்தில் குவாலி, டிமாரா பணித்தளங்களை காணவும் குறிப்பாக ஹசல்வாட் கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். ஆத்துமாக்கள் திரளாக வாஞ்சையுடன் இருப்பதை காண்போம். திறந்த வாசல், மிகுந்த அறுவடை கண்டு ஆத்துமபாரம் பெற்றோம். மேலும் சுமார் 50 0CBC (VBS) ஆசிரியர் பயிற்சி நடைபெறுவதையும் சுமார் 20,000 விசுவாச மாணவர்களுக்கு நடத்துவதை கண்டு பிரமித்தோம்.

பீல் மக்கள் மத்தியில் ஆவியானவரின் வல்லமையுடன் நடைபெறும் மிஷனெரி பணி எங்கள் நெஞ்சங்களை நெகிழ வைத்து , ஜெபத்தினாலும் பொருளாலும் இந்த ஊழியங்களை மேன்மேலும் தாங்க வேண்டும் என்ற வாஞ்சை ஏற்படுத்துவதற்காகவே கர்த்தர் எங்களுக்கு இந்த பயணத்தைத் தந்தார் என்பதை நாங்கள் உணர்கிறோம். வாய்ப்பளித்த ஷாலோம் ஊழியங்களின் ஸ்தாபகர் **பிஷப். தேவதாஸ்** அவர்களுக்கும் ஊழியர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இதை வாசித்துக் கொண்டிருக்கிற சகோதர, சகோதரிகளே நீங்களும் சபைகளாக இம்மாபெரும் தரிசனப்பணியை ஜெபித்துத் தாங்க முன்வருவோமாக...

# ஆதிவாசி சிறுவர்களுக்கு கல்வி பணி செய்வதின் அவசியம்

எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட மண்ணின் மைந்தர்கள் தான் ஆதிவாசிகள். இந்தியாவில் 400க்கும் மேற்பட்ட ஆதிவாசி இன மக்கள் வாழ்கின்றனர். சூழ்நிலைகளால், சுற்றியுள்ளவர்களால், சுகபோகம் அனுபவிக்கும் செல்வந்தர்களால், செல்வாக்குப் பெற்றவர்களால், நசுக்கப்பட்ட நிலையில் உள்ளனர். இந்திய அரசாங்கம் அவர்களுக்கென்று எத்தனையோ திட்டங்கள் தீட்டினாலும் எதுவும் அவர்களை முழுமையாக சென்றடைவதுமில்லை, சென்றடைய விடுவதுமில்லை. இத்தகைய பரிதாபமான மக்களை மாற்றத்தக்கது பாரபட்சமற்ற பரிசுத்தர் இயேசுவின் சுவிசேஷம்தான். இந்த வல்லமையான சுவிசேஷத்தை இந்த மகா தேசத்தில் அறிவிக்கும் பணியில் பல கிறிஸ்தவ மிஷனரிகள் தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாது ஈடுபட்டு பல லட்சம் மக்களை பரலோக வாசிகளாக மாற்றியுள்ளனர். ஆனால் கிறிஸ்துவமாக்குதல் என்பது மத மாற்றமாகாமல் (Convertion) மறுரூபமாகுதலாகும் (Transformation). எனவே ஆதிவாசி ஜனங்களின் ஆன்மீக நலனில் அக்கறை கொள்ளும் நாம் அவர்களுடைய சமூக நலன்களிலும் அக்கறை கொள்வது மிகவும் அவசியமாகும். இத்தகைய சமுதாய பணியில் தலை சிறந்தது கல்வி பணியாகும்.

நம்முடைய அன்பு பகிர்வு இயக்கம் பீல் மக்களின் மத்தியில் செய்து வரும் மகத்தான சேவை மூலமாக சுமார் 40 ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்களும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு நேராக வழிநடத்தப்பட்டுள்ளனர். இந்த பீல் ஆதிவாசி சிறுவர்கள் பெருபான்மையோர் கல்வி வாசனையே இல்லாதவர்கள். பீல் இன மக்களின் படிப்பின்மைக்கு பல காரணங்கள் உண்டு. அவற்றுள் சில..

**1. கல்வியின் பயனறியாமை.**

ஆதிவாசி ஜனங்கள் பெருபான்மையோர் கல்லாதவர்களாக இருப்பதினால் அவர்களுக்கு கல்வியின் பலன் தெரியவில்லை. கல்வி அறிவில்லாத பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் கல்வி கற்பதற்கான அவசியத்தை உணரவில்லை. ஆதலால் சிறுவர்களும் சிறுவயதிலிருந்தே பெற்றோர்களின் முறைமையை பின்பற்றி வருகின்றனர்.

**2. சாதகமற்ற சூழ்நிலை :–**

ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவில்லாமைக்கு அவர்கள் வசிக்கும் சூழ்நிலைகள் முக்கிய காரணமாக இருக்கின்றன. சிறுவர்களின் பெற்றோர்கள் கல்லாதவர்களாக இருப்பதால் சிறுவர்கள் படிப்பினை சரி வரக் கவனிக்கவோ அருகிலிருந்து பாடங்களை சொல்லிக் கொடுத்து பயிற்றுவிக்கவோ முடியவில்லை. ஆதிவாசி கிராமங்களில்

மின்சார வசதி கொஞ்சம் கூட இல்லாமையால் இரவில் படிப்பது இயலாத காரியம். மேலும் கிராமங்களில் இரவு நேரம் திருடர்கள், குடிகாரர்கள் பயம் அதிக அளவில் உண்டு. ஆகவே பெரும்பாலானவர்கள் மிக விரைவிலேயே படுக்கைக்குச் சென்றுவிடுவார்கள்.

**3. குறைவான, தரமற்ற பள்ளிகள் :–**

ஆதிவாசி ஜனங்கள் வாழும் பகுதி பெரும்பாலும் மலைகளும், குன்றுகளும் நிறைந்த வனாந்திரப் பகுதியாகும். இங்கு மிக, மிக குறைவான அளவிலேயே பள்ளிகள் காணப்படுகின்றன. கல்வி கற்க வேண்டுமானால் ஒரு சிறுவன் சுமார் 10 மைல்கள் நடப்பது அவசியமாகிறது. அப்படி அவன் சென்றாலும் அங்கு பெரும்பாலும் காணப்படுவது ஆசிரியர்கள் இல்லாத பள்ளிக்கூடமே. ஆதிவாசி பகுதியில் உள்ள ஆசிரியர்கள் பெரும்பாலும் ஊதியம் வாங்குவதற்காகத்தான் பள்ளிக்கு வருவார்கள். மேலும் ஐந்து வகுப்புகள் உள்ள பள்ளிக்கு ஐந்து ஆசிரியர்கள் இருப்பதே மிகவும் கடினம். இதனால் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி வாழ்க்கைத் தரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

**4. சிறுவர் வேலை :–**

ஆதிவாசி குடும்பங்களில் அன்றாட உணவிற்காக அவரவர் உழைக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. இத்தகைய சூழ்நிலையில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதைக் காட்டிலும் அன்றாடம் கூலி வேலை செய்ய அனுப்புவதையே மிகவும் விரும்புகின்றனர். எதிர்கால பலனைவிட நிகழ்கால உடனடி தேவைகளை தீர்க்கவே விரும்புகின்றனர். மேலும் குடும்பக் கட்டுப்பாடற்ற சூழலில் அநேக பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதால் தினசரி வருமானம் அதிகரிக்கப்படுகின்றது. மட்டுமல்லாமல் பெரிய குழந்தைகளிடம் சிறு குழந்தைகளை கவனிக்கும் பொறுப்பை கொடுத்துவிட்டு பெற்றோர் கூலி வேலைக்குச் செல்வதால் குழந்தைகள் படிப்பு தடை படுகிறது.

**5. பாலிய மணம் :–**

மிகவும் இளம் வயதிலேயே திருமணம் செய்து வைக்கும் பழக்கம் ஆதிவாசிகள் மத்தியில் காணப்படுகிறது. பாடப் புத்தகங்களை சுமக்கின்ற வயதில் சிறுவர்கள் குடும்ப பாரத்தைச் சுமக்கின்றனர். இதனால் பள்ளிக்கூட படிப்பும், உயர் கல்வியும் அவனுக்கு எட்டா கனியாக மாறிவிடுகின்றது. அந்தச் சிறுவனும் வளர்ந்து தன் பிள்ளைகளுக்கு கல்வியைத் தருவதைவிட கரையேற்றுவதையே விரும்புகிறான். இப்படியாக கல்வியறிவின்மை தலைமுறை தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

**6. நமது கடமை :–**

இன்னும் ஓராயிரம் காரணங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் விடுத்து ஏழை ஆதிவாசி சிறுவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றை ஆராய்வது சாலச் சிறந்ததாகும்.

நம்முடைய ஆண்டவர் பட்சபாதம் அற்றவர். தன்னைப் போல் பிறனையும் நேசிக்கக் கற்றுத் தந்தவர் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் மழையை வருஷிக்கப் பண்ணுகிறார். ஆகவே அவருடைய இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் அவரது சொல்படி நடப்பது தலையாய கடமையாகும். இன்று நமது தென்னிந்தியாவின் எந்தத் தெருக்கோடிக்குப் போனாலும் கிறிஸ்தவ பள்ளிகள் நம்மை வரவேற்கின்றன. அவைகள் எல்லாம் நமக்கு இயேசுவை அறிவிக்க வந்த மேல்நாட்டு திருத்தொண்டர்கள் கொடுத்த கருணைக் கொடையாகும். அவர்கள் மட்டும் தேவ பணியோடு கல்விப் பணியைத் தராது விட்டிருந்தால் நாம் கூட இன்று பனைமர தொழிலாளிகளாக, பாக்கு வெட்டிகளாக, பட்டை சாராயம் காய்ச்சுபவர்களாக, கைநாட்டுகளாக, தோளில் போடுகின்ற ஆடையை இடுப்பில் கட்டிக் கொண்டு கால்களில் செருப்புகளின்றி வீதிகளில் சுற்றிக் கொண்டிருப்போம் அதை யாரும் மறுக்க முடியாது. எவர்களுக்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ அவர்களிடம் அதிகம் கேட்கப்படும் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் தேவன் தந்த இனிய வாய்ப்பிற்காக அவருக்கு கோடி நன்றியை செலுத்தி, படிப்பறிவில்லாத கோடிக்கணக்கான ஆதிவாசி சிறுவர்கள் வாழ்வு மலர்ந்திட நம்மால் இயன்றதைச் செய்திட முன்வரும்போது நிச்சயம் நம்முடைய பலன் பரலோகத்தில் மிகுதியாக இருக்கும். அதனால் தான் வட இந்தியாவில் மிஷனெரிப் பணி செய்பவர் அனைவரும் மிஷனெரி பணியோடு கல்விப் பணியையும் நிறைவேற்றி வருகின்றனர். அந்தக் கல்விப் பணிகளால் படித்து முடித்த பிள்ளைகளில் அநேகர் இன்று நட்சத்திரங்களாக மிளிர ஆரம்பித்துவிட்டனர்.

இந்த பணியைத்தான் நம்முடைய அன்பு பகிர்வு இயக்கத்திலும் தேவன் நமக்குக் கொடுத்த தரிசனத்தின்படி பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் செய்ய விளைகின்றோம். 19 வருட மிஷனெரி பணியில் பல்லாயிரக்கணக்கான ஆதிவாசி சிறுவர்களை தேவன் நமக்குத் தந்துள்ளார். இவர்களுக்கென்று நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தருவது கிறிஸ்துவின் அன்பினை பகரும் நமது கரத்தினில்தான் உள்ளது. சரியான உடையின்றி உணவின்றி வனாந்தரத்தில் மாடுகளுக்குப் பின்னால் சென்று கொண்டிருக்கும் சிறுவர்களில் குறைந்தது ஆயிரம் பேர்கள் வருங்காலத்தில் தலைசிறந்த ஊழியர்களாக, அரசாங்க அதிகாரிகளாக, மருத்துவர்களாக, பொறியியல் வல்லுனர்களாக, கலெக்டர்களாக, கரை படியாத அரசியல் வாதிகளாக, பேராசிரியர்களாக மாற்றிப் பார்க்க இயேசு கிறிஸ்துவுக்குள் பிரயாசப்படுகிறோம். எனவே உங்கள் முயற்சியில் உற்சாகம் குறையாது உங்கள் ஈடுபாட்டினை எதிர்பார்த்து நிற்கிறோம்.

**“இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தின் நிமித்தம் ஏற்றுக் கொள்கிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான்”. (மத் 18:5)**

# பீல் ஆதிவாசி மாணவர் கல்வி திட்டம்-2010

தேவ கிருபையினால் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 19 ஆண்டுகளில் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவப் பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளிலிருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் | – 560 |
| 2. | ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் | – 90 |
| 3. | ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் | – 30 |
| 4. | ஷாலோம் விடுதி அந்தர்வேலியா, மத்தியபிரதேசம் | – 25 |
| 5. | ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் | – 25 |
| 6. | ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் | – 220 |
| | மொத்தம் | – 950 |

ஆகவே கீழ்க்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

- 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.
- 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.
- இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.
- பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.
- ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய 300 புதிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2010 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2009ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 950 மாணவர்களுக்கு **ரூ. 4,75,000/–** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.”** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.



# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவனின் பெயர் : **அணில் கட்டாரா**

தகப்பனார் பெயர் : ஹராலால் கட்டாரா

தாயார் பெயர் : தாரிபா கட்டாரா

பிறந்த நாள் : 14.06.1999

படிக்கும் வகுப்பு : 3rd Std.,

சொந்த ஊரின் பெயர் : பாடலா

மாவட்டம் : தாகோத்

மாநிலம் : இராஜஸ்தான்

**மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :–**

அணில் கட்டாராவின் தந்தை இயேசுவை அறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய உடல் முழுவதும் எரிச்சல் வியாதியினால் கஷ்டப்பட்டார். மந்திரவாதிகளிடமும், மருத்துவர்களிடமும் சென்று காண்பித்தபோது குணமாகவில்லை. இதனால் இவருடைய வாழ்க்கையில் சமாதானமின்றி காணப்பட்டார். இந்த சூழ்நிலையில் ஷாலோம் விசுவாசியின் மூலம் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, இயேசுவின் மீது விசுவாசம் வைத்தார். பின்னர் அருகிலுள்ள கிராமத்தில் இருந்து ஷாலோம் ஊழியர் வந்து இவருக்காக ஜெபித்தார். ஊழியர் வந்து ஜெபித்த சில நாட்களிலேயே, இவர் இந்த வியாதியில் இருந்து பூரண சுகம் பெற்றார். தேவனுக்கே மகிமை! இந்த அற்புதத்தைக் கண்ட இவரது குடும்பம் “இயேசுதான் மெய்யான தெய்வம்” எனக் அறிக்கை செய்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளாயினர். அதன்பின் அணில் கட்டாராவின் தந்தையை தேவன் ஊழியத்திற்கென்று அழைத்தார். அந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்.

**ஜெபியுங்கள் :–** மாணவனின் படிப்பிற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், பெற்றோர் செய்யும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** ***Mr. Tenny Johnson*** - Bangalore

¿eLÞmUôRm ì.400/-ùLôÓjÕÀp B§Yô£UôQYûWù_©jÕRôeLØu
YWXôm.EeLsS i ToLsUt ßmE\®]oLû [ÙmRôe ÏYRt Ï A±ØLlTÓjRXôm.

# ஈவ்லின் பிராண்ட்



மிஷனெரி முன்னோடிகள்

**ஈவ்லின் பிராண்ட்** (Evelyn 'Granny' Brand) இங்கிலாந்து தேசத்திலுள்ள மெல்போர்ன் என்ற இடத்தில் 1879ஆம் ஆண்டு ஹாரிஸ் தம்பதியினருக்கு ஒன்பதாவது குழந்தையாக பிறந்தார். இவரது பெற்றோர் தம் குழந்தைகளுக்கு நல்ல கல்வியும், தேவையான வசதிகளையும் தேடி வைத்திருந்தார்கள். இவர்கள் அனுதின ஜெபம், ஓய்வு நாள் ஊழியங்கள், தசம பாகம் கொடுத்தல், ஏழைக்கு உதவுதல் போன்றவைகளை கடைப்பிடித்து வந்தனர். தம் பெற்றோரின் முன் மாதிரியான வாழ்வின் மூலம் பிள்ளைகள் தொடப்பட்டனர். ஈவ்லின் தன்னை ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்திருந்தபடியால் 1911ஆம் ஆண்டு ஸ்டிரிக்ட் பாப்டிஸ்ட் மிஷன் சங்கத்தின் மூலம் இந்தியாவிற்கு வந்து, தமிழைக் கற்றுக்கொண்டார். முன்பாகவே 1907ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து இதே சங்கத்தின் மிஷனெரியாக ஜெசிமன் பிராண்ட் தமிழ்நாட்டிற்கு வந்து, சேலம் மாவட்டம் கொல்லிமலை தொடரில் உள்ள ஆதிவாசி இனத்தவர் மத்தியில் ஊழியம் செய்துகொண்டிருந்தார். இவர் ஆங்கில வைத்தியம், தச்சுவேலை, கட்டிடவேலை, பட்டுவேலை முதலியவற்றை அறிந்திருந்தார்.

மிஷனெரி ஜெசிமான் பிராண்ட் அவர்களுக்கு ஈவ்லின் அம்மையாருக்கும் 1913ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சேந்தமங்களம் SBM ஆலயத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்த உடனேயே 3700 அடி உயரத்தில் உள்ள கொல்லிமலைக்குப் பயணமானார்கள். தங்கள் வாழ்க்கைக்காக அமைக்கப்பட்டிருந்த மரவீட்டிற்கு டோலி மூலமாகவும் நடந்து சென்றார்கள். 16 வருடங்கள் இதே மர வீட்டில், குடும்பமான பல இன்னல்களுக்கு மத்தியில் இம்மலை மக்களுக்காக உழைத்தனர். **"விசுவாசி, வெற்றியடைவாய்"** என்பதாகும்.

கொல்லிமலையில் வாழும் மக்கள் காராளர் என்ற ஆதிவாசி இன மக்கள் குழந்தைத் திருமணம், பலதாரத் திருமணம், குறி கேட்பது, பிள்ளை பிறந்த நேரம் சரியில்லை என்று கோடாங்கிக்காரன் சொல்லிவிட்டால், அக்குழந்தையை முறத்தில் கிடத்தில் வேலி ஓரமாக போட்டுவிடுவார்கள், அல்லது கொல்ல வகை தேடுவது போன்ற மூடப்பழக்க வழக்கங்களை உடையவர்கள். கல்வி வாசனையே இல்லாதவர்கள். அம்மலையிலுள்ள கிராமங்களுக்கு நடந்தும், குதிரையிலும் சென்று மருத்துவ உதவிகள் செய்து, அதன் மூலம் கிறிஸ்துவின் அன்பைக் கூறி வந்தார்கள். இங்குள்ள மக்களுக்கு அரசாங்கத்திடம் கூறி நிலப்பட்டா வாங்கிக் கொடுத்தார்கள். மருத்துவமனை, கருணை இல்லம், ஆலயம் போன்றவைகள் கட்டினார். கைவிடப்பட்ட பெண்களையும், தூக்கி எறியப்பட்ட குழந்தைகளையும் கருணை இல்லத்தில் வைத்துப் பராமரித்து வந்தார்கள். இம்மலை மக்களுக்காக 12 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினார். இந்தத் தம்பதியினருக்கு பால் வில்சன் என்ற மகனும், போனி என்ற மகளும்

பிறந்தார்கள். இவர்கள் சிறுவர்களாக இருக்கும்போது சரியான வயதில் பள்ளியில் சேர்க்கமுடியவில்லை. வயது கடந்த பின்னரே 7 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள சொந்த தேச்தில் தனது சகோதரியின் பராமரிப்பில் விட்டு விட்டு இம்மக்களுக்காக அயராது உழைக்க திரும்பி வந்தார்கள்.

கொல்லிமலையில் கிராமங்களுக்கு நடந்து சென்றும் கடினமாக இரவும் பலலும் உழைத்து, அயராது பாடுபட்டு, சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்ந்ததால் "கருப்பு காய்ச்சல்" என்று அழைக்கப்படும் மலேரியாவினால் தாக்கப்பட்டு அவரது கணவர் ஜெசிமன் பிராண்ட் 1929ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ம் நாள் மரணமடைந்தார். இவரது கடைசி வார்த்தைகள்: **"இம்மலை கிறிஸ்துவின் மலையாகுக"** என்பதே. எனவே தன் கணவரின் மரணத்திற்கு பின்பு தாய் நாடு சென்று தன் பிள்ளைகளைப் பார்த்துவிட்டு, ஊழியத்தையே பெரிதாக எண்ணி மறுபடியும் வந்து தொடர்ந்து ஊழியம் செய்தார். இம்மலையில் தனியாக ஊழியம் செய்ய இயலாத சூழ்நிலையில் சென்னையில் பெண்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். இம்மலை மக்களை அதிகமான நேசித்தபடியால் இவர்களின் நினைவு மாறாமலேயே இருந்தது. எனவே கோடை விறுமுறை நாட்களில் இம்மலைக்கு வந்து ஊழியம் செய்து வந்தார். 36 ஆண்டுகள் பாப்டிஸ்ட் சங்கத்தில் ஊழியம் செய்து 1948—ல் ஒய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின் சுயாதீனமாக பெரிய கல்வராயன் மலையில் ஊழியத்தை ஆரம்பித்தார். தகப்பனார் தனக்கு கொடுத்த சொத்திலிருந்து வரும் வருமானத்தை வைத்து ஊழியத்தை நடத்தி வந்தார். 66 வயதான அம்மையார் மலை கிராமங்களுக்குச் செல்ல குதிரையைப் பயன்படுத்தினார்கள். கிராமங்களுக்குச் சென்று அங்கேயே கூடாரம் போட்டுத் தங்கி நற்செய்தி கூட்டங்கள் நடத்தி மருத்துவ உதவிகளை செய்த வந்தார். ஒரு முறை கிராமத்தில் முகாமிடச் சென்றபோது டோலியிலிருந்து கீழே தவறி விழுந்து தலையில் பலமாக அடிபட்டதால் சிகிச்சைக்குப்பின் சரியாக நடக்கமுடியவில்லை. ஆனாலும் தேவபெலத்தால் இரண்டு மூங்கில் குச்சிகளின் உதவியுடன் ஊன்றி நடந்து ஊழியம் செய்தார்கள். 1948ல் பச்சைமலையில் போய் தங்கி ஊழியம் செய்து வந்தார். ஜாகிரி மலையில் மக்கள் கஞ்சா பயிரிடுவதை தடுக்க பல பாடுகளைப் பட்டார். சித்தேரிமலை, போதமலை மர்நூத்துமலை போன்ற மலைகளிலும் ஊழியம் நடைபெற்றது. ஈவ்லின் அம்மையார் இம்மலை ஊழியத்திற்கு **"மலை சுவிஷேச ஐக்கியம்"** என்று பெயரிட்டார்கள். இதன் ஸ்தாபகர் பிராண்ட் அம்மையார் ஆவார்கள்.

ஈவ்லின் அம்மையார் சுயநலம் இல்லாமல் மற்றவர்களின் துன்பத்தில் உதவி செய்வார்கள். பழைய புதிய ஏற்பாடுகளை ஒப்பிட்டுப் படித்தல் என்ற தலைப்பில் 13 பாடங்களை எழுதியுள்ளார்கள். இவைகள் சுதேச உதவியாக இருந்தது. 1974ஆம் வருடம் செப்டம்பர் மாதம் தனது மகனுடன் வேலூர் கரிகிரியில் இருக்கும்போது கீழே விழுந்து சிகிச்சை பலனில்லாமல் படுக்கையானார்கள். 1974 டிசம்பர் 18ல் தனது 95ஆவது வயதில் கர்த்தருடைய பாதத்தில் இளைப்பாறச் சென்றுவிட்டார். அம்மையாரின் விருப்பத்தின்படியே கொல்லிமலையில் தனது கணவரின் கல்லறைக்குப் அருகிலேயே 19ம் தேதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம். அனுப்பி விட்டு உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

AXIS BANK

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

ICICI Bank

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

## தூத்துக்குடி பகுதி ஷாலோம் ஆதரவாளர்கள் கவனத்திற்கு...

**Rep : 059** **சகோ அற்புதராஜ் மர்காஷியஸ்,** (ஷாலோம்) Ph: 9245780864
**Rep : 023** **சகோ. சாம் குணசீலன்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9345675468
**Rep : 028** **சகோ. ஜான்சன்ஜெபராஜ்** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9362617374
**Rep : 002** **சகோ. ஆலன் எல்விஸ்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9344727978
**Rep : 032** **சகோ. ஜான்சன்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9362672155
**Rep : 005** **சகோ. ஜெயபால்** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9789718935
**Rep : 076** **சகோ. ரதீஷ் குமார்** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 96006 - 95598
**Rep : 057** **சகோ. ஜெயபிரகாஷ்,** (ஷாலோம் முழுநேர ஊழியர்) Ph: 9994077782
**Rep : 058** **சகோதரி பட்டுரோஸ்,** கோரம்பள்ளம், தூத்துக்குடி
**Rep : 060** **சகோதரி ஜாய் கிரேஸ்,** கால்டுவெல் காலனி, தூத்துக்குடி
**Rep : 016** **சகோதரி. சாந்தி லிவிங்ஸ்டன்,**
17-A சுந்தரவேல்புரம் 2 வது தெரு, மேலூர், Ph: 2361059
**Rep : 031** **சகோதரி. செல்வசீலி** 133/10 S.M. புரம் 5வதுதெரு,
**Rep : 015** **சகோ. டேனியேல் கிருபாகரன்,**
6B-1A, பிரையண்ட்நகர் 3வது தெரு, Ph: 98431-15663
**Rep : 074** **Pas. சாமுவேல் சவுந்தர்**
IPM Church, பிரையண்ட்நகர் 11வது தெரு (மத்தி), தூத்துக்குடி.
**Rep : 044** **சகோ. ஜெபக்குமார்,** 1/12 Type I CampI அனல் மின் நகர், Ph:9486936040
**Rep : 046** **சகோ. பாலசிங்,** 107J,152 மில்லர்புரம், Ph: 0461-2311012
**Rep : 047** **சகோ. முத்து**
அமுல்யா சீ புட், C-97, Sipcot Industrial Complex மடத்தூர். Ph: 9894685538
**Rep : 048** **சகோ. செல்வராஜ்** Type II 211 CampI அனல்மின் நகர். Ph: 9600745589
**Rep : 035** **சகோ. தாமஸ்** 47A/1, பூபால்ராயர்புரம் 1வது தெரு, Ph: 9842509223
**Rep : 036** **சகோ. அன்டோ**
Bethesda Prayer House 107/26, 1B மில்லர்புரம் அண்ணாநகர் மேற்கு
**Rep : 045** **சகோ. காட்வின்**
Nila Sea Foods, 137 புதூர் பாண்டியாபுரம், Ph: 9443344754
**Rep : 062** **சகோ. பாஸ்கர்**
23-A, Pillayarkoil St, State Bank Colony. Ph: 9994025696, 9994170465
**Rep : 007** **பீட்டர் தனசிங்,** 2-4/419-D, Rajiv Nagar, 8th Street. Ph: 9843171045
**Rep : 027** **சகோதரி நிர்மலா ஃபெலிக்ஸன்**
No. 11 N.G.O. Colony, 3rd Street. Ph: 0461–2310766

ஷாலோம் ஊழியத்திற்காக தூத்துக்குடி பகுதியில் மேற்கண்ட பிரதிநிதிகள் காணிக்கைகளை தியாகத்துடன் சேகரித்து அனுப்பி வருகிறார்கள். இவர்கள் அனைவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். தேவன் தாமே இவர்களையும் இவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக! **மேலும் ஆதரவாளர்களாகிய உங்களிடத்தில் இவர்களைத் தவிர வேறு யாராவது ஷாலோம் ஊழியங்களுக்காக காணிக்கை சேகரிக்க வந்தால், தயவு செய்து** எங்கள் தொலைபேசியில் **( Cell : 9345675468)** தொடர்பு கொண்டு உறுதி செய்துவிட்டு அதன்பின்பு காணிக்கைகளை கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ள மிக அன்பாய்க் கேட்கிறோம்.

பிளஸ் 2 தேர்வில் 85.2 சதவீதம் மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்த ஆண்டும் மாணவர்களைவிட, மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்று சாதனைபடைத்துள்ளனர். ஆனால் கணக்கு பாடத்தில் சதம் எடுத்தவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்துள்ளது. தூத்துக்குடி எஸ். வி. ஹெச் வித்யா மேனிலை பள்ளி மாணவன் பாண்டியன் 1187 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்திலேயே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மாரடைப்ப, மக்களையும் மருத்துவ உலயைும் இன்றைக்கு ஒரு கவலையில் ஆழ்த்தியிருக்கிற மிக முக்கியமான பிரச்சனை. முன்பெல்லாம் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் மாரடைப்பு வரும் என்கிற நிலை இருந்தது. ஆனால் சமீப காலமாக 35 வயது இளைஞர்கள் கூட திடீரென மாரடைப்பால் இறந்து போகிறார்கள். பொருளாதார அளவில் முன்னேறிய நாடுகளில் இப்போதும் மாரடைப்பு என்பது முதியவர்களின் மருத்துப் பிரச்சனையாகவே கருதப்படுகிறது.

கல்லூரிகளுக்கு அங்கீகாரம் வழங்க பல்கலைக்கழக மானியக் குழு (யு.ஜி.சி.) புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. நகர்ப் புறங்களில் அமைக்கப்படும் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்க, அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்காக குறைந்த பட்சம் 2 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். நகர்ப் பறம் அல்லாத பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். புதிய கல்லூரிக்கு முதலில் தற்காலிக அங்கீகாரம் தான் வழங்கப்படும் அதன் பிறகு ஆய்வு செய்து விட்டு 5 ஆண்டுகள் கழித்துதான் நிரந்தர அங்கீகாரம் தரப்படும்.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# கிராம ஆலயம் வட்டா மத்தியப்பிரதேசம்



மத்தியப்பிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டதிலுள்ள தாந்தலா தாலுகாவில் உள்ளடங்கிய கிராமம்தான் வட்டா ஆகும். இந்த கிராமத்தில் சரியான போக்குவரத்து வசதிகள் கிடையாது. இங்கு வாழும் மனிதர்களின் தொழில் திருடுவது, கொள்ளையடிப்பது மற்றும் சாராயம் காய்ச்சி விற்பதாகும். இந்த ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறியாதவர்கள். மேலும் பிசாசின் பிடியிலும், சாபத்திலும், மந்திரவாதிகளின் கைக்குள்ளும் வாழ்பவர்கள். வியாதிப்பட்டால் மருத்துவரை அணுகாமல் மந்திரவாதிகளிடம் சென்று பூஜைகள் செய்து பலிகள் கொடுப்பது இவர்களது பரம்பரை வழக்கமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வந்தவர்தான் சகோ. மால்சிங் கராசியா. சகோ. மால்சிங் கராசியா அவரிகளின் முழு குடும்பமும் பிசாசின் பிடியில் சிக்கி வேதனைப் பட்டுக் கொண்டிருந்தது. பிசாசின் பிடியில் இருந்து விடுதலை பெற மந்திரவாதிகளை நாடி பல ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்தும் பலனில்லை. என்ன செய்வது என்று தெரியாத நிலையில் இருந்த சகோ. மால்சிங் கராசியா ஷாலோம் சுதேச ஊழியர் மூலமாக ஹகுவாணி கிராமத்தில் நடைபெறும் ஜெபக்கூடுகையைக் குறித்துக் கேள்விப்பட்டு, அந்த ஜெபத்தில் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் அவருக்காக ஜெபித்தபோது, ஜெபத்தினை தேவன் கேட்டு இவருடைய குடும்பம் முழுவதையும் பிசாசின் பிடியில் இருந்து விடுவித்தார். தேவனுக்கே மகிமை! அதன்பின் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டு விசுவாசியாக வாழ்ந்து வந்தார். அதன்பின் தேவன் இவரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்தார். அதன்பின் ஊழியத்திற்கு அர்ப்பணித்து தனது சொந்த கிராமத்தில் ஆராதனை ஆரம்பித்து தற்போது 27 குடும்பங்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி வருகிறார். ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே, ஆலயம் கட்ட தனது சொந்த நிலத்தை காணிக்கையாகத் தந்தார். அந்த இடத்தில், கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தேவனுக்கே மகிமை!


இந்த கிராம ஆலயம், மார்த்தாண்டத்தைச் சேர்ந்த Dr. சுரேஷ் J. பால் அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியிலிருந்து கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

புதுப்பொலிவுடன்.... ஷாலோம் இணையதளம்

Visit our Shalom Modish Website




தமிழ் & ENGLISH

- ஊழியங்களைக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள...
- ஜெப தேவைகள் மற்றும் புதிய தகவல்களைப் பெற...
- பணித்தளங்களில் நடைபெறும் ஊழியங்களின் புகைப்படங்களை காண...
- அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரை இணைய தளத்தில் வாசிக்க...

இன்னும் தகவல்கள் ஏராளம் உள்ளன...

See Today Itself

**www.shalommission.in**

Introduce to Others

காணுங்கள்.... அறிமுகப்படுத்துங்கள்...

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss